மாந்தி காவியம் மகுடேமனில்

மாந்துருக்கோம்

C

025:417
N15
148259

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 APR 1915
MADRAS.

268







எட்டயபுரம் சமஸ்தானம் சின்னமநாயக்கன்பட்டி
பத்திரகாளியம்மன் பேரில்,

# பாதமுளைக் கும்மி.

இஃது

ஷையூர் க்ஷத்திரிய சான்றோர்களின் பொருளுதவியால்,

ஷை சமஸ்தானம் சேதுபுரம்

மகா-ா-ா-ஸ்ரீ கி. மு. சுப்பாநாயக்கரவர்கள் குமாரர்

ஷை சமஸ்தானம் சென்னப்பட்டி ஸ்கூல்மாஸ்டர்

## S. குமரய்யா நாயுடு அவர்கள்

இயற்றி

ஷையார் குமாரர் பொன்னுச்சாமி இராக இசையின்படி,

தூத்துக்குடி சுப்பிரமணியவிலாச அச்சியந்திரசாலையில்,
புரோப்ரைட்டர் K. சிவசூரியநாராயணபிள்ளை யவர்களால்
அச்சிடப்பட்டது.

...90-ஞ ஆனந்தவருஷ மாசிமீ [அணா 1

Ou25:417
N15
[illegible]

உ

சிவமயம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 APR 1915
MADRAS.

பத்திரகாளியம்மன் பேரில்,

# பரதமுளைக் கும்மி.

கணேசர் விருத்தம்.

திருவளர் பத்திரகாளி தேவிமேற் கும்மியைச் செப்ப
மருமலர் குழலாளான மாதுவல் லவையோ டோங்கு
ஒருமருப்பொடு நால்வாயு முயர்மிகு வாகுவேறி
வருகணபதியே வுந்தன் மருமலர் சரணம்போற்றி.

சீர்வளர்சின்னமநகர்வாழ்பத்திரகாளிசெல்வியின்மேல்முளைப்பாரதஞ்செப்பநா
பேர்வளர்பேரானந்தப்பெம்மாஞனபித்தனருள்புத்ரனெனபிரணவத்திற்(ளும்
ரூற்வளர்தற்பரமௌனமோனஞானத்தந்திமுகத்தைதந்துகராதருவாவாக்குக்
கார்வளர்கற்பகமிகுமூஷிகவாதொந்திக்கணபதிதாளிருசரணங்காப்பதாமே.

சிந்து பைரவி] திருப்புகழ். [சம்பை தாளம்

சென்னல்வளமிகு சின்னமநன்னகரி லரசுபுரி
செல்வி பத்திரகாளி யுமைதேவி மேல்முளைப் பாரதஞ்
செப்பு தமிழிப்புவியி லொப்பவரமே தருக
சித்திவிநாயக சேவடி யெத்தினமும் நீயருள வருவாயே

கன்னல் கமுகின்னிதமா வின்னமதுருது கமழ்
காட்டுமன நாட்டமுட னூட்டிடு கணேச கிருபை
சாக்ஷிகொடு மாக்ஷிமை காமாக்ஷியருள் கற்பகமா
காரணமதான வடிவே யடியற்குன் கருணைபுரி நீயே

பன்னல் பௌசம்பதியி லுன்னிதமுடன் பரவ
பங்கயமலற் கழல்பதாம்புய மீதிற்படிய
பண்பொடு வியாசர் வேத மின்பமெனவே பகரு
பாரதம் வரைந்தசிவ ஞானேதய மானகய முகநாதா
நன்னல்மிகு மின்னகரிற் சொர்னமய மாகவெந்த
நாளுமன்பர் வாளவரம் நாடியேகொடுக்கும் நய
நற்றவ முறுந்துறவோ ரெத்தினமுமே துதிசெய்
சுத்தமய மானநய வத்தனருள் சத்திகணபதி வேதா.

148259

தேசிக தோடி] காவடிச்சிந்து [அடதாளம் சாப்பு

அந்தரியே சின்னமநக ரமர்ந்திடு முமையே
யன்பர்கருள்தரவொரு வரிதனில்தரு சிருவியேமரு மலரணிதிருவே
நிரந்தரியே ஆளவா புரந்தரியே
சுந்தரியே யுன்மேற் சிந்துசொல வரம்புரியே
வேதஸ்ருதியே முடியருதியே ஒளிபருதியே மனதுறுதியே
தருசுகிர்த மாதரியே ஜெகஜோதி யாதரியே.
முந்தரியே காந்தரிமுராரி சோதரியே
மயிடன்முடிசிதறிட உடல்பதறிட முறைகூறிட தரைபீறிட
மோதுசமரியே மோனமாது குமரியே
பந்தரியே பக்தரி பத்ரகாளி பூதரியே குமார் பகர்தமி ழதி
கதிபெற வரமதுதர விதுததிமதியுதி பரமநாயகியே
கண்ணுற் பாருந் தாயகியே

காம்போதி இராகம்] வேறு சிந்து [ஆதிதாளம்

அன்னை பத்ரகாளியே யருள்தருவா நீயே
தினமரனிடமணு வகலாதுமையாகிய யன்பர்மிகுஞ்சுக
வின்பஜகாயியே அனுதினமுன் சேர்வையே யளித்தன்பரை கார்பையே
உன்னையல்லாற் றுணையே உண்டென்பது யிணையே
முன்னுலகினை யீன்றவதாரிய கோரிநீ யுரைதமிழரி கிருபா பரிபூரணி
யுதிப்பாயென் வாக்கிநீயே யுகந்தென்னுளுந் தனியே
நன்னயந்தரும் பரையே நம்பினேன் றிரிபுறையே
திவ்யநருமலராணி திருநாரணிபூரணி நற்கதிதர மனம்நாடிடுகோரணீ
நவில்தமிட்கே யிங்கையே நாளும்கார்ப்பாய் மங்கையே
யென்னையாத ரிப்பாயே யேகாந்த ஈஸ்பரியே
தமிழிசைசொலி யனுதினமேற்று குமார்க்கரு ளெப்பொழுதுந்தரு
சிற்பரையேவா யேழைகலி தீர்ப்பாநீயே யிதுதருணங் கார்ப்பாயே

அருள்வளராயிரத்தென்பத்தொன்பதாண்டிலானந்தகடகதிங்களிநாங்கேழில்
பொருள்வளர்சின்னமநகர்வாழ்பத்ரகாளிபூரணிமேற்சேதுநகர்புகட்சிதங்குங்
கருவளர்கம்பளகுலசுப்பையவேழ்முன்னங்கருதுதவக்குமரயபாவல்லன்மிக்க
உருவளர்க்ஷத்திரியகுலத்தவர்களிமெய்க்கவுகந்துமுளைப்பாரதமதைவுரைத்திட்
[டேனே.

### பெருநாளி மகாவித்வான் முருகேசபாண்டிய சோதிடரவர்கள் இயற்றிய அறுசீர்களிநெடிலாசிரிய விருத்தம்

சீதமுகிற் றவள்பொழில் நாற்புறஞ்சூழ்ந் தோங்குஞ் சின்னம நன்னகர மதிற்சிறந்துவாழும், மாதரிய சத்திரிய குலந்தனை முன்னீன்ற வராகிபத்திர காளியுமை மாதுமீதே, காதலொடு முளைப்பரதமுரைத்தான் சென்னல்கழனி தொருஞ் சங்கினங்கள் தாழமீனுஞ் சேதுநகர் சுப்பயவேட் தவத்தாலீன்ற செல்வனுங் குமரயபா வல்லோன் மாதோ.

### சேதுபுரம் இலக்கணமுத்து G. சுப்பாநாயுடவர்கள் இயற்றிய குருவிருத்தம்.

செந்திருநிறைந்திலகுஞ்சின்னமநன்னகர்வதியுந்தேவியாயி
அந்தரிபத்திரகாளியம்மையின்மேல்முளைப்பரதமணியற்செய்தான்
சுந்தரவித்வசனர்புகழ் தூயகுமார்க்கவிஞனெனச்சொல்லுந்தோன்றல்
இந்திரவியுள்ளவரைவாழ்சேதுநகர்வதியுமிசைவல்லோனே

### கவுண்டன்பட்டி மாவித்வான் மு. சன்னாசிக்கோனா ரியற்றிய, கவி

ஆழிசூழுலகிற் கோர்திலகமென வமைந்தசின்னம நகர்வதியும்
ஆழிசூள்கரன்சோதரி பத்திரகாளிமேல் முளைக்குமி யரைந்தான்
ஆழிசூளெழிமென் மலர்மகளுரைந்தணி கிழர்சேதுமா நகரம்
ஆழிசூள்கரன் சுப்பயபோச னருள்குமாராய பாவலனே.

இந்துஸ்தான்காபி] **பரதமுளைக் கும்மி.** [ஆதிதாளம் சாப்பு

தன்ன னன்ன னன தான னன்ன னன
தன தான னன்ன னன
தன தான னன்ன னன னன்ன தான னன்ன னன

O25:417 N15

#### கணேசர் துதி.

ஐங்கரனை யனுதினமு மன்புடனே யேற்றித்-திகளடியிணையைப் போற்றி
உன—தருள்பெறவே கொன்றை பிச்சி மலர்முடிமேற் சாற்றி (1)

பொங்கரவணி சங்கரனருள் புகழ்மிகுந்த பாலா-போதமறை யுணர்ந்த சீலா
நாளும்—போற்றினவர்க் கென்றுமுத்தி புரியு மனுகூலா (2)

#### சரஸ்வதி துதி.

வேதமுத லாகம விஸ்தார புஷ்பபாணி-வெண்டாமரை கல்யாணி—ஜக
வீரிபத்திரகாளி தமிட்கே யருள் செய்வேணி (3)

நாதாந்த கீர்வித்வ நாயகி பூபதியே, யெந்நாளுந் தயாநிதியே—எந்த
நாவிலுமகந்திடு விதுநல் வேளை சரஸ்வதியே (4)

#### சிவபெருமான் துதி.

கருணைசெய்ய விதுசமையங் கைலைவளரீசா, கதிதருங்கிருபா நேசா-என்றுங்
காப்பதுந் தன்கடமை யன்றோ கர்த்தனே சர்வேசா (5)

அருணகிரி வளரு மையனுன பரமேசா, அண்ண லாதிவிசு வேசா—யிந்த
அவனி சராசர மனைத்து யாளும் பவநாசா (6)

## மஹாவிஷ்ணு துதி.

பஞ்சவர்க்குத் தூதுசென்ற பாலகிஷ்ணராமா, பக்தர் பரவுகுணநேமா-யிந்தப்
பாரதனை யளந்த பச்சமாலே பரந்தாமா (7)

அஞ்சலென்றோர்க் கருள்புரியு மரிஹரி கோவிந்த-யரவிந்தா நித்யா னந்தா
அன்று—ஆலிலைமேற் பள்ளிகொண்ட வச்சுதா வைகுந்தா (8)

## சுப்பிரமணியர் துதி.

செந்திநகர் நின்றிலங்கு சுந்தரிதன் பாலா, செயல் தந்திடுவா சீலா—திருச்
சிகிமிசையே யேறிவரு செங்கைவடி வேலா (9)

தந்திமுக னுக்கிளைய கந்தா வரந்தாரா-யிருதாளிணை தரவே வாரா-என்றுந்
தஞ்சமென்றோர்க் கருள்தரு சண்முக கிருபைகூரு (10)

## பாவலர் துதி.

நாவலர்கள் தனைப்பணிந்து நாயடியேன் கூறு-மிசை நற்றமிட்கே யாரு
மெந்த—நாளுங் கிருபை செய்துடனே நாடியே கண்பாரும் (11)

பூவிலுயர் போதமறை புரவலர்கட் கெல்லாந்—தமிட் பொருந்தும்படி சொல்ல
உந்தன்—பொற்பதந்தா பத்திரகாளி யுத்தமியே நல்ல (12)

உமையருளுஞ் சேதுநக ருயர்கம்பள வாசன்புக-ளோங்குசுப்பு போசன்
பெற்ற—உருமை குமார் முளைப்பாத மோதுமன்பர் தாசன் (13)

இமையி பத்திரகாளி தனதியலினருளாலே சான்றோ-றென்றுமொலிபோலே
வாழ்ந்—திலங்க கிளைதளைத்தோங்க யென்றுமே மென்மேலே (14)

சொன்னமுளைக் குமிதமிட்கே சுந்தரியே காப்பா—ஒருசோர்வு வராதேற்பா
நாளுஞ்—சோதி பத்திரகாளி வருதுயர்தனையே தீர்ப்பா (15)

மன்னர்மகிழ் சின்னமநகர் வாழ்ந்திலங்க வந்த—மகமாயி யெனச்சொந்த—மிகு
மாதவமா யுதித்த பத்திரகாளி யருள்முந்த (16)

## பெண்கள் நதி செல்லல்.

கொர்வத்துடன் மாதரம்மன் கிருபையையே நாடி—வெகு கெற்சிதமாத் தேடி
கீத—சங்கீதப் பரதமுளைக் குமித்தமிழைப் பாடி (17)

பருவமட மாதர்பத்திரகாளிபதந் தனையே-யெண்ணிப் பத்தியொடு நினையே
அம்மன்—பதிதனையே நாடப் பவமேகிடு முன்வினையே (18)

அறந்துலங்கு சின்னமநக ராண்ட புரந்தரியே—அன்பர்க் கருளும் நிரந்தரியே
யெங்கட்—காதாரம் நீயலது வேறிலை யந்தரியே (19)

பரந்துலங்கச் செய்யும் பத்திரகாளியே யுன்றனக்கே—முளைபாங்குடன் செய்
பவர்க்கே யென்றும்—பரலோக சித்திபெறப் பலனளிப்பாள் நரர்க்கே (20)

அன்னநண்ட மாதரக மகிழ்ந்தவர்தன் மனையில்-வடிசி லன்புடனே விரசில்
செய்ய—வவசியம் நீர்க் குடமெடுத்தே வனைவர்வெகு திரசில் (21)

நன்னயஞ்சேர் வீதிவழி நங்கையர்க ளெல்லாம்வெகு-நளினமுடன் மெல்லச்
சொல்—நாகரீகம் பேசியவர் நதிதனக்கே செல்ல (22)

பாமரகசியம் போலவர் பாட்டையெல்லாம் பேசி-யெதிர் பார்த்தவரைக் கூசி
பால்யர்—பருத்தகுட மிடிக்கியவர் சிறக்கவே கைவீசி (23)

துறவோர்கள் துதிக்கும் பத்திரகாளி கோவிற்சென்றே-நின்று தொழுதனர்
கள் நன்றே திவ்ய—சுத்தஜல மெடுக்கநதிக் கேகிவாரு மென்றே (24)

தெரிவையர்கள் நதிக்கேகுஞ் சிங்காரங்க ளென்ன-தேவி திருவடிக்கே முன்
னஞ்-சென்று-திவ்ய தெரிசனம் பெற்றதால் ஜெயம்பெறுவோமின்னம்(25)

நாரியர்க ளோவியம்போல் நளினமுட னெயிலா-விளிநாடுவது அயிலா—அவர்
நாகரீகம் பேசுமொழி சோலைவளர் குயிலார் (26)

அம்மனருள்பெற்றுநதிக் கருவையர்கள்செல்லும்-வழியதில் விருக்ஷப்புல்லும்
வள—ரதிசெயத்தைப் பாருங் கடியாரு மொன்றாய் நில்லு (27)

தம்மான்செய் மோடியே யித்தரணி வாழ்விதெல்லா-மிந்திர சாலநிக ரல்லால்,
நிசந்—தானாகா தத்துவித சாஸ்திரம்பார் நல்லா (28)

கும்புகும்பாக் கம்பளப்பெண் கூட்டத்தையே பாரும்—அவர் கூறும் பாஷை
யோரும்-அடி—கோதையரே செருக்குமவர் குலத்தைக்கண்டு தேரும்

நம்பிவழி நடப்பவர்க்கு நாரணியாள் துணையே-தேவி நாயகி தாளிணையே-
பெற்று—நதிக்கேகி ஸ்தானஞ்செய நாமடுத்தோ மணையே (30)

இந்தவழிச் சிறப்பைநாம மெல்லாம்பார்த்து நதிக்கே--சென்று எதாஸ்தானப்
பதிக்கே—நாம—ளேகியே நற்றானஞ் செயவென்று மனந்துதிக்கே

ஸ்நானம் செய்யும் பாகம்

சந்ததமு மிந்தநதி சகலபிணி தீர்க்கும்-தேவர்சதுர் மறையோர் யார்க்கும்-
பவஞ்—சாராது ஸ்தானஞ்செய சாயுச்சிய முண்டாக்கும் (32)

யென்று மின்னார் சொல்லி நதிதன்னிலே-நீராடி யவரேக உறவாடி—மஞ்ச
ளெடுத் துரைத்துப் பூசியங்கே யிருந்தனரே கூடி

நன்றுகதி பெறவே ஸ்தானம் நாமள் செய்தோஞ் சரியே-யினி நான்சொல்வ
தை குறியே—அடி—நங்கையரே நதியினலங்காரஞ் சொல்வேன் அறியே()

சாரும் விநோத மங்களஞ் சான்றோர் சங்கையாகும்--பவஞ்சாரா தேகிப்போ
கும்—யெதுவுஞ்—சாதிப்பதே சத்திரியர்குல வளமதாகும்

பாருங்கடி நீரிற்கயல் பலவிதமாக்கூடி--மீறிப் பாய்ந்துதிரிந் தோடி—மொலி
பரூப்புமதின் குறிப்புமதைப் பகரமனம் நாடும் (36)

தேருமுள்ளான் கயலைக்கொத்தித் தின்னமனங் கொண்டு-அதுதிரியும் வண்
மைகண்டு—கொக்கு—சேறிமிகப் பின்துடர்ந்து செல்லுதுபா ருண்டு

தாராநீரில் சீராமிகத் தாவுவதைப் பாரா--அடிதையலரே கூறு—நாரை
தானெதிங்கி வக்காவுடன் தரிக்குதங்கே நேரா (38)

கூறுமயில் குயில்புறாக்கள் குலபக்ஷிக ளெல்லாம்--ஒன்றாய்கூடி யங்கே நல்ல
அன்றில்—கோரமிகு புள்ளினங்களைக் கூர்ந்துபாருஞ் செல்ல

புறாவின் நதியிற்றானஞ் செய்திடவே தோசம்--பவம்போகும் நெறிவாசம்
வெகு—புண்ணிய முண்டாகுமடி பூவையரே நேசம் (40)

நதியருகி லாலரசு நாலுதிக்குந் திரசே--வேம்புநல் லுடைகள் புரசே—பலா
நாரத்தையும் நாகைபுன்னை வாகையும் பூவரசே

பதியில் வளர்ந் தோங்கிடுமே பாங்குடநற் றேங்கு--அருண் பக்க மேலாங்
கோங்கு—யெங்கே—பார்த்தாலும் பலவகையா நிற்குதே நீர்நாங்கு (42)

இன்னோ வரையிலிங்கிவ் வதிசயத்தைப் பார்த்தோம்--மனைக்கேகி முளை
கோற்போ மென்று-யெண்ணிநதித் தன்னிற் சலமெடுத்துப் பவந்தீர்த்போம்

முன்னோக் குடங்கள் தனை மெய்க்குழலா ரெடுத்தார்-வழிமுறைப் படியே
யடுத்தார்—முத்தி—மோக்ஷந்தரு நதியைவிட்டுக் கடந்தனர்கள் திடத்தார் [44]

பக்கமுகம் பாராம லக்கரையா வாரார்- பல நினைவதனை யோரார்—தங்கள்
பதிதனையே நாடிவந்து பக்தியுட னுகந்தார்

தக்கமதிப்புடன் விரதந்தான் முடிக்க வடிசில்-மனையிற் தான்செய்தனர்
விரசில்—செய்து—தையலர் களமுது புசித்திருந்தனர்கள் திரசில் (46)

இருந்தவர்க ளம்மனுக்கு யேற்றமுளை யெடுக்க--வித்து யிருக்கு மிடமடுக்க
எண்ணி—யெங்கெங்குந் தேடிநன்று யினிவிரத முடிக்க

பொருந்து மனை தன்னை மாதர்பூசி யலங்கரித்தார்--கோலம் போட்டு மிகவிரி
த்தார்—வெகு—பொங்கமுட னங்கையர் வெண்ணீர் நுதலிற் தரித்தார் (48)

கடகதிங்க ளானதிலே கன்னியர்க ளொன்று- செவ்வா கதித்த தினம்நன்று
கருதி—கனிவுகந்து முளைக்கேற்ற வித்தெடுக்கச் சென்றார்

மடமயிலா ரகமகிழ்ந்து மாவிரதங் கொண்டு--மலர்பறித்து வந்து தொண்டு
செய்ய—மனதுகந்து வரமளிப்பாள் மாரிநம்மைக் கண்டு (50)

வித்துவிபரம்

ஈஸ்பரிதன் முளைக்கேத்த யினியகொட்ட முத்தே-அதிலிருக்கும் வெகுசித்தே
எள்ளோ—டிலங்கு காராமணிப் பயர்தானியற்கை யானவித்தே

பாசிப்பயருடன் கடலைபருத்தி மொச்சை துவரை-படர்ந் திலங்கிடு நல்லவரை
குளிர்—பங்கையத்தை நிகர்த்த பச்சைமரகதம் போலோரை (52)

தாலமதில் விளையுந் தட்டப் பயறுடனே சகல-வித்துத்தானே சேர்த்துப்புகல
அடி—தையலரே முளைக்கிசைந்த சமையகாலம் பகலே

ஆலரசு புன்னைபுளி யத்தியும் நல்லகத்தி-யிதை-யாருங்கொள்வாள் சகத்தில்
அடி—ஆயிளையீ ரின்னமுங்கே ளன்பாக நெஞ்சகத்தில் (54)

சத்தான சடம்புவித்து சாதிகல்லு பயரும்-முளை சரியாகவே தெயரும்
யென்றுஞ்—சத்திரிய சான்றோர் குலந்தழைத்து மிகவுயரும்

சித்தான முத்துவெள்ளை சிறுமணியன் சம்பா-மிளகி சிறந்த வானைகொம்பா
பல—சீங்கண்ணி நெற்சேர்ந்தால் முளைசெய முயர்ந்தஅம்பாம் (56)

முத்திதரும் வித்துகளை மொய்குழலார் சேர்த்து-ஆதிமுறையதனைக் கார்த்து
முளை—முளைத்துவரப் பிரம்பங்கூடை வாங்கயம் பார்த்து

க்ஷத்திரியச் சான்றோர்குலஞ் சகலர்களு மொன்றுக் கூடிச்சாது சங்கம்நன்று
அங்கே—சரியாக வணிவகுத்து முளைபரப்பி நின்றார் (58)

நின்று முக்யமாக முளைநித்தம் வளப்பவர்கே-சுத்தநீதியைக் கார்ப்பவர்கே
யென்றும்—நிலைபெறவே பத்திரகாளி வரமளிப்பா ளெவர்க்கே

முளைச்சிறப்பு

இன்றுமுத நாட்டுடங்கி வினிதுடனே முளைக்க-கதிரென்னவே நேர்தழைக்க
நன்று—இலங்கு முளைக்காக தண்ணீரெடுத்து வரவழைக்க (60)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 APR 1915
MADRAS.



துன்றுங்கிளை தழைத்தோங்கத் தொடர்ந்துரண்டா நாளில்--முளை துரித முட
னாளில்—பவம்—தொடராது சான்றோர் நீடூழ்பெருக வம்மன்னாளில்

பணிந்து பத்திரகாளிதனைப் பாவையர்கள் பலரும்--முளைபகர் மூன்று நாள்
மலரும்—தினம்—பக்குவமா நீரிறைக்கப் பலிகியது கலரும் (62)

நாலாநாளிளம் பிறைபோல் நகசிதமா முளைகள்--தளிர் நருமலரூங் கிளைகள்
வெகு—நாட்டமுடன் வரும்விதத்தை நாடிப்பாரும் தழைகள்

காலாகாலஞ் சென்னல்கன்னல் கமுகுகளை மேலே--விளைகதிர் நுனியின்
போலே—அம்மன்—காக்ஷியதா யைந்தாநாள்முளை கதித்ததே தன்னாலே ()

ஆறுநாளில் சீராமுளை யடர்ந்தன்பு போலோங்கி--அதற்கணுகும் பிணி நீங்கி
வெகு—வமுசடனே வளர்கின்ற வதிசயம்பார் பாங்கி

பாராயேழாங் நாள்முளைகள் பச்சைமரகதம் போல்-பலவிச்சையிலா நிறம்போல்
தேவி—பார்வதியாள் கண்திறந்து பகருகின்ற வரம்போல் [66]

பச்சைபரகதம் போல்முளை பலதளிர்கள் பெருக--பத்திரகாளி வரந்தருக
தினம்—பார்க்கப்பார்க்க வளர்ந்துவரும் பத்திகண்டு உருக

அச்சமிலா தரசனன்பு வாக்கிர மித்தாற் போலே -கூர்மை யாகுமது மேலே
வளரு—மதிசயத்தை யென்ன சொல்லலாகு மெவராலே [68]

நித்தநித்த மாதர்கள் நீரிறைக்க பிறைபோலே--நீல மரகத முன்னாலே
மின்னும்—நிறத்தை யொத்தே வளர்ந்துமுளை வருகுதே தன்னாலே

சத்திபத்திர காளிசிவ சங்கரி ஓங்காரி--துர்கை சாமள சிங்காரி—தனை
சரணஞ் செய வரமளிப்பாள் சமர பயங்காரி [70]

முளைவளர கிளைதளிர முன்னோர்கட்கே மோக்ஷம்-சான்றோர் முடிப்பதுவை
ராக்கியம்-அம்மன்—முன்னிற்கவே என்றென் றுமே முற்றுமே சாயுச்சியம்

விளைவு சென்னலாதாய விர்த்தியு மென்மேலே-வருமை விட்டோடுந்தன்னா
லே—வீரி—விளிதிறக்க பிணிபுறக்கச் செய்வாள் பனிபோலே [72]

முளையமைந்த யுடனனைவர் முக்யபந்த லன்றே--சடுதிமுடிக்க வென்று நன்
றே--கோத்ர—முறைப்படியே கூடிநாற்கால் நாட்டினார்கள் சென்றே

களைகள்னெடுங் கழில்வரிச்சல் கட்டினார்கள் திரசா--மிகு காக்ஷியென விரசா
பத்ர—காளியருள் வீற்றிருந்து கருணைபுரி யரசா [74]

நித்யசுப சோபன மாம்பந்த லலங்கரித்தார்- முளை நிலைபெறப் பூரித்தார்
அங்கே—நெட்டு நெட்டாத் தோரணங்கள் கட்டியுபசரித்தார்

சத்திமுளை யிருக்குமிடம் தன்னில்புஷ்பச் சரங்கள்--தூக்கிச் சகலமும் நல்
லறங்கள்-செய்து—சன்னதிமுன் கமுகுதென்னங் குலையுடனே மரங்கள் []

வரிசையுடன் கதலிபலா மாங்கனிகள் வத்து--மிக வணங்கிடவே மெய்த்து
மேலே—வர்ணமுள்ள புடவைகள்மேற் கட்டியெனத் தைத்து

பரிகளுரு படங்கடனைப் பந்தலின் நேராக--வெகு பௌசுட னென்றாக
முக்ய—பாங்குடனே தூக்கி யலங்கரித்தனர் நன்றாக [78]

சொர்ன மயமாக மிகச்சோடித் தலங்கரித்தார்-வெகு சொகுசுபெற விரித்தார்
தேவி—சோதி பத்திரகாளி முளைசொலிக்கவே உச்சரித்தார்

வர்னப்படங் கட்டியங்கே வகைவகையா யெல்லாம்-திரசா வாகுடனே நல்ல
அம்மன்—வரம்பெறவே பந்தலவர் வகுத்ததென்ன சொல்ல (80)

அந்தமுருஞ் சின்னம நகர்க்கரசி பத்திரகாளி-வந்தமைந்தவள் நீடூழி—சார்க்க
அனைவருமே முளைவளர்க்க வாக்கமென்று வாழி

சுந்தரிக்கே யேற்றபந்தல் சுவர்க்கலோகம் போலே-வமைந்த சுத்தமது மேலே
நாவாற்—சொல்லி யளவிடவே நம்மா லாகாதறிவாலே (82)

சோடித் தலங்கரித்த பின்பு சொர்னமடமாதர்-ஒன்ருச் சொகுசுபெரு நீதர்
அவர்—சொம்புடனே நகைபூணச் சென்ருர்வர பரதர்

தேடிமனை தன்னிலுள்ள திகழும் வர்னப்பட்டு-கட்டி திருநுதலிற் பொட்டு
மிட்டு—தெரிவையர்கள் செங்கைதனி லழகுவளை தொட்டு (84)

சொருகு கொண்டை தன்னில்க் கும்பிசொலிக்கு முருகிட்டுச்-சொம்புரு
க்கு மணிதொட்டு—மிகக்—சோபிதமாத் தாள்வடங்க ளிலங்குமணிப் பொட்டு

மெழுகரக்கு வளையல்முன் கைமின்னலெனச் சொலிக்க-பார்த்தமெல்லியர்க
ளுவிக்க-காலில்—மெட்டிமிஞ்சி கொலுசுதண்டை விரலில்பீலி கலிக்க ()

பொன்னுடை யாபரணம் பொற்கொடியார் பூட்டி-ஸ்தன்யம் பொருந்து கச்சு
மாட்டி-யங்கே—போதமறையா யமைந்த மாதுபதம் நாட்டி

மின்னார்க ளம்மனுக்கு வேணவஸ்து தேட-வெகு மகிழ்சியொடு கூட
இந்த—மேதினியி லிருக்கும்பல கனிமலர் கொண்டாட (88)

ஷட்ரச வர்க்கமுடன் சமையல்செய்து கொண்டு—பின்பு சக்திதனைக் கண்டு
தொழச்—சகலகனியுடன் கற்பூரஞ் சன்னதிக்கே தொண்டு

முட்டையுடன் முருங்கைவஸ்து மொய்குழலார் சேர்த்து- தேவிமுளை முன்
னுக விரித்து-வைக்க—மோனமுட னேர்த்துவரம் பார்த்தளித்தாள்சிரித்து()

வாசகியாள வரமளிக்க வனுதையர்க ளெல்லாங்-கூடி வந்தனமே நல்லார்
செய்து—வாகுபெரு முளையெடுத்தே வணங்கிவலஞ் செல்ல

மாசன்றி வரமளித்தாள் மாதுபத்திரகாளி--யடி மாதரசே ஊழி—வரை
மகிட்சியுடன் பிணிநீங்கி வாழமின்னங் கேளீர் (92)

என்றுசொல்லி மின்னர் முளையெடுத்துச் செல்லவென்றே
பேசி யெச்சரித்தா ரன்றே—அங்கே
யிருந்தபெண்கள் தொழுதுமஞ்சள் நீரிறைத்தார் சென்றே

நன்றுதரு பத்திரகாளி நாரிதனைத் தொழவே-நல்ல வேளையிது வெனவே
முளையை—நங்கைய ருென்ருகவே சேர்த்தெடுத்தனர் சீர்பெறவே (94)

நாகசுரந் தவில்முரசு நடிக்குதங்கே மேளம்—நகாரா நலமுடன் கைத்தாளம்
பம்பை—நவுரிசின்னந் தாரைகிடி பிடியுட னெக்காளம்

ஆகமத்தி லமர்ந்தபிட்டி லருமோனியந் தம்பூர்--யெல்லாமடர்ந் தொலிக்குங்
கிம்பூர்—முதல்—அமைந்தமுக வீணையுட னமர்ந்தகோருக் கொம்பு (96)

பல்லியங்கள் முழங்க முளைபரிவுடனே யிலங்க-வெகு பாங்குடனே துலங்க
நன்ருய்—பாதபதம் பாடப்பத்திர காளியருள் பலங்கள்

### மேளச்சிறப்பு.

மெல்லிநல்லா ரொன்றாகவே மின்னிடைகள் துவள-மிக மேகமிஞ்சு தவள
தேவ—மேனகை ஊர்வசிக்கு நிகாமேயிதள் பவளம் (98)

ஆடம்பரமாக முளையனைவரு மொன்றாக-யெடுத்தருவையர் நன்றாகச்
சான்றோ—ரருள் வீதிதன்னில் செலு மதிசெயம் போராக

தேடவரி தானதிருத்தேவி யருளாலே-திவ்ய தேசோமயம் போலே--யம்மன்
தெரிசனங் கண்டாற் பவவிட்டேகுமே தன்னாலே (100)

அம்பல மிருசையப்ப நாடான்மனைக் கெதிரே-முளையருளுடனே சதிரே
பாடல்—அடர்ந்தவீதி தன்னில்நிற்கின் றவர்கள்சான் றோர்பிதிரே

இன்பமதா நேர்கிழக்கா வெழுந்துமுளை சிறந்தே-மிக விளங்குதங்கே சுரந்தே
மேள—மெங்குந் தொனிகேட்டு மாதரிடை கலையைமறந்தே (102)

சம்பிரம சங்கீதமேளஞ் சகலமுமேமுழங்க--முளைமேற் சத்திநின்றா வளங்கச்
சின்னஞ்—சாமண்டலங் தவண்டையுடன் றாமெனவே விளங்க

பம்பரம்போற் சக்கிரவாணம்பகல் வெத்தியோடாற்ப-அங்கு பரமனருளேற்ப
ஆதி—பத்திரகாளி முளையதனைப் பலஜனங்கள் பார்ப்ப (104)

### நகர்வலம்

மிருசையப்பனனுசன் பிச்சநாடான் மக்கள்நேரா--வாழுமில்லின் வழிசேரா
முளை—மிக விளங்கிச்செல்லும் பரிவாரமது பாரா

திரசவர்க ளரசுமனை தீர்க்கமென்றுந் திருவே--தேவி தரிசனத்தா லருவே
யென்றுந்—தியங்காது நீண்டசெல்வந் தழைக்குந் தேவதருவே (106)

சத்திரியச்சான்றோர்வீதி தனைக்கடந்து பின்பு-லுப்பைசமைக்கு மனைமுன்பு
முளை—சகல வாடம்பர மாகவேதானடக்கு மன்பும்

எத்தினமும் பாண்டங்களை இயற்று வேளார்வீதி-அது எப்போதுமேயாதி
புக—ழெங்கும்பிர சங்கமதா யிருக்குமருட் சோதி (108)

வெள்ளையப்ப நாடான் கடைவீதிவெகு சிறப்பே-சில்வன் வேண்டுவர்கள் சுரப்
பே--அதி—விஸ்தாரமா யிருக்கும்பல கிளைகள் நீடேழ்பிறப்பே

பிள்ளை பிறப்பதிக மென்னும் பெருகிவளர்ந் திலங்கும்--மிகப்பிரபவமா யிலங்
கும்--என்றும்—பிதிர்களனுகூலம் பெற்றென்னாளு மறம்விளங்கும் (110)

வேதநூல்க ளாறாயும் வெள்ளையப்ப நாடான் -வெதிரி யானவற்கே ஓடான்
திருடர்—வேணபேர் வந்தாலுங் கண்டு விருப்பமாகத் தேடான்

பாத தரிசனங்கள் கண்டாற்பவமகன்றே யோடும்-யென்றும் பரமபதந்தேடும்
முளையைப்—பார்த்தவருக் கெல்லாம்பத்திர காளியருள் நாடும் (112)

கடைவீதிச் சிறப்புமுன்னால் கனகதம்பூர் மேளம்-தெருவைக் கடந்தனர்கள்
நீழம்—அம்மன்—காக்ஷிதனைக் கண்டடியார்க் கருத்தறிவதாழம்

அடையலர்க ளுடன்முளை முன்னடர்ந்து செல்லுஞ்-செருக்கேயங்கே வடுத்த
கோவிற் பெருக்கே-ஆதி—யானவண்டிமலைச்சியம்ம னருள்நீங்காதிருக்கே()

அருள்கொடுப்ப ளாற்குவண்டி மலைச்சியம்ம னுதவி--ஆதி முத்லிமாற்கே
புதவி—தரும்—அன்னையனுகூலி வுயிர்க்காதாரமே நிதவி

பொருள்மயமே பொற்பணிதி பூஷனங்களாகும்-வுலகிற் போற்றிடுவதாகும் தேவி—பொன்னடிக்கே தொண்டுசெய்தால் நன் றூகதியாகும் (116)

ஆதி வண்டிமலைச்சி கோவிற் கடுத்தவரே காலி-வீதி யதன்வழி கபாலி-முளை யருளுடனே செல்லும் பத்திரகாளி யனுகூலி

நீதியொடு நின்றுதமிழ் நிலைபெறவே யோது--குமார் நீடூழ யெப்போது வாழ்க—நிரந்தரியாள் பத்திரகாளி யருள்செய்வாள் தப்பாது (118)

சத்திசக தேவியருள் சான்றிடுநல் வாசன்--சகல சம்பன னுல்லாசன்—யார்க் குஞ்—சற்சனன் கம்பளகுல மாரியப்ப னதிநேசன்

சித்திபெரு மனைமுன்னகைச் சிறந்துமுளை செல்ல-சில சேடியர்கள் மெல்ல பின்னல்—சிவனடியார்பாட லம்மன்செயலிதுதா னெல்லாம் (120)

திருக்கண்.

உத்தம கம்பளகுலத்தி லுதித்திடுமா யோகன் உலகோ ருக்கதிடு வைபோகன் றிட—உறுதிமன ஊக்கமற முபயனதி வாகன்

பத்தனதி பிரியன் காளியப்பன்மனை முன்னல்-முளைபாங்குடனே தன்னல் வரும்—பகுப்புஜன வகுப்புடனே பாடிவாரார் பின்னல் (121)

சுந்தரியாள் முளையுடனேசுருதி மேளவாத்யம்-சுரதசொம்பாக நைவேத்யஞ் செய்து—சுத்தமுடன் றிருக்கண்பார்த்தாற் சொற்கலோக பாத்யம்

அந்தரியா னந்தியிந்த வருள்வீதனிலே-வருவடியார் நினவினிலே—சிங்கா தமைந்திருப்பாள் பத்திரகாளியன்பர் கனவினிலே (124)

காளிகோவி லதனையடுத்துக் கம்பளத்தார் செரிவு-மேற்கே காடமைந்த பிரி வும்—முளைக்—காக்ஷிதனைப் பார்த்தகன்று யேகுகின்ற அறிவும்

ஆழிசூழு மிவ்வுலகி லினவருக்குஞ் சிப்பி-தெய்வ ஆசாரிக ளொப்பிக்-கட்டி அயத்தொழில்கள் செய்யுங் கூடமடுத்தனர்கள் தொகுப்பில் (126)

உலைக்கூடம்விட்டகன்று உறுதிசந்தை ரோட்டு-வழியி லுகந்துமேளம்போட் டு—செல்லு—மொருங்குமவர் மருங்குங்கன உல்லாச வல்வேட்டும்

நிலைமைபெறு சேதுபதி குலத்தார்வீதிக் கடுத்த நேரே நிற்குமரந் தொடுத்த வழியில்—சீதிபத்திரகாளி முளை நேராகவே விடுத்தார் (128)

ஐங்கரனர் கோவில்தனை யடுத்துமுளை சிறக்க-மேள மதிர்ந்துமிக வுரக்க முத்தி—யருள்புரிவா வானைமுகா வென்றுசொன்னார் நிரக்க

சங்கரி யோங்காரிசத்தி சாமளைதன் முளையே-சென்னல் சகலதான்யம் விளை யே-நாளுஞ் சரியாக மாதமும் மும்மாரிபெய்யக் களையே (130)

அத்தனருள் புத்திரனை யன்பாகவேபணிந்து-முத்தி யருளெனவே துணிந்து மிக—அல்லிகிளை யென்னுமுளை யரசிருக்க நினைந்து

பத்தரெனுஞ் சத்திரிய சான்றோர்க்கருள் ததியே-கிருபைபாலிப்பா நன்னிதி யே—ஆதி— பத்திரகாளி புத்திரனென வந்த கணபதியே (132)

மாரியம்மன் தரிசனம்.

கணபதியைத் தொழுது சான்றோர்க் கருணை தருமாரி கோவி லடுத்தனர்கள் தேறி—முளையை—கவனமுட னிறக்கிக்குமி நடித்திடுவோம் வாரீர்

குண்மிகு சான்றோர்கள் கும்புகூடி யொன்றுபோலே--முளைக் கொட்டினர் கையாலே—அவர்—குலவழக்க மொருநாளுங் குறையா றறிவாலே (134)

ஆடவர்கள் கூடிநன்ருய்ப் பாடினர்க ளொயிலா-ஆதியாகமம்பார் குயிலா—அடி யன்னநடை மின்னிடையீ ரசமகிழ்கூ ரயிலா

தேடவரிதான திருத்தேவிகோவில் முன்னே-நாமள் தெரிசித்திடில் மின்னே முன்செய் தீவினைகளேகி யருள்சேருமடி பொன்னே (136)

அன்னை சந்தனமாரிநமக் கருள்செய்குவள் நேரே-அடி ஆயிளையீர் பாரே மனதி—லன்புடனே யனைவர்களும் நம்பிமிடி தீரே

நன்னயஞ்சேர் சந்தனமாரி நமக்கருள்செய்வாளே-கும்மி நடிக்கநல்ல வேளை அடி—நங்கையரே யிங்கித மங்களஞ்சொல்வா நல்லாளே (138)

மங்களஞ்சொலி முளையதனை மகிழ்ந்தெடுத்தா ரெல்லாம் வந்த மார்க்கமதே செல்ல—மேள—மதறிடவே வேடிக்கை யாலாத்தியுடன் மெல்ல

திங்கள்வந்து தோன்றத் தென்றல் சீராமுளை நேரா-திவ்ய தேசோமயம்பாரா யடியார்—திருக்க ணருகாக நின்றுசெப்பு கவியோசா (140)

சகல பரிவாரமுடன் தான் முழங்கியிலங்க-வேதசங்கமது துலங்க—எங்குஞ் சதுர்விதபாராயணங்க ளெங்குமதி நலங்கள்

இகலணுகா திடத்திற்கூப மிருக்கு மழகென்ன-மாதரிடை கலைகள்மின்ன சுற்று—மேந்திளையார் நீரெடுப்ப தியற்கையாகு மன்னம் (142)

நகரிலுள்ளோர் யாவருக்கும் நலந்தருமா நதியே-யருகில் நாயகிதன் பதியே கடந்து—நவுரிபம்பை யதிரச்சதிர் நாட்டியங்கள் சுதியே

சுகரிஷிக ளனுதினமுந் துதித்திடுமந்தரியே-சோதி யாரணி சுந்தரியே—முளை மேற்-சுருதியதா யமர்ந்துசெலுஞ் சுத்த புரந்தரியே [144]

மருவிலாத சேதுநகர்மா கம்பளவாசன்-மன்னர்மகிழ் சுப்பயபோசன்-பெற்ற மதலைகுமார் முளைப்பாதம் வழுத்துமன்பர் தாசன்

திருவகலாச் சின்னமநகர் தேவிபத்திரகாளி-தினமருள்செயும் வேதாளி-மீது திவ்யமுளைப் பாதமதைச் செப்பினேன் நீடூழி [146]

பாதமுளை தனக்குப்பின்னல் பாடினர்களடியார்-தனைப் பாராதார்கள்மிடியார் யென்றும்—பத்திதனைச் சாதனையா யோர்பிடியாய்ப் பிடியார்

வாத நித்யானந்திமுளை வாகோடிசையாக வரிசை வரிசையோ டொன்ருகப் பெறு—வானிடிபோல் மேளவாத்ய முழங்கவே முன்னுகை [148]

புண்ணியஞ்சேர் தவமடத்தின் பொருத்தமென்ன சொல்ல-வெகு புகழ்ச்சி யது நல்ல--கிருபா—பூரணிதன் மகிமையதால் வந்தசெய லெல்லாம்

நண்ணுமுளை கொண்டுவந்து நங்கையர்கள்சிறந்தார்-பவம் நாடாமலேதுறந்தார் தேவி—நாரணிக்கே தொண்டுசெய வேணுமென்றே பிறந்தார் [150]

திருவைநிகர் மின்னுர்கோவிற் சென்றுமுளை தன்னை-தேவி திவ்யபத முன் னே-வைத்து—தெரிசிக்கச் சாம்பிருணி தூபங் கொடுத்தனர்கள் பின்னே

அருவையர்க ளாலாத்தி யனைவர்கொண்டு வந்து-பின்பு வன்புடனே யுகந்து
பிச்சி—அல்லிகுட முல்லையுட னர்ச்சிக்கவே மகிழ்ந்து [152]

புகல்வரிதான பத்திரகாளி முளைபார்த்தாள்-வெகு புகழ்ச்சியுட னேர்த்தாள்
சொந்த—புத்திராளுஞ் சத்திரியச் சான்றோர்களைக் காத்தாள்

சகலமேளம் பகல்வெத்திகள் தானடக்க-முன்னஞ் சத்திசாதாரூகச்சொன்ன
நகரிற்—சாயுச்சியமா யென்றும் நீடூழ்தான் பெறுவீரென்ன [154]

அம்மனருள் கொடுத்தபின்பு ஆயிளைமா ரெல்லாம்-வெகு வன்புடனே நல்ல
திரு—அலங்காரமுளையை யெடுத்தருள் நதிக்கேசெல்ல

மஞ்சநீராடல்

மும்மையுடன் மறுமைவினை முற்றுந் தீர்க்கும்நதிக்சே-சென்று முளையை
வைத்துப் பதிக்கே-வா—முக்யமஞ்சள் நீராடவென்று மனந்துதிக்சே [156]

சல்லாப குணசாந்த ரொனமஞ்சள் நீரிரைத்து-வெகுசரசவார்த்தை யுரைத்து
சான்றோர்—சகலருமே மங்களமாச் சரணஞ்செய் துச்சரித்து

உல்லாசமொடு மஞ்சள் நீரிரைத்தவர்க ளெல்லா,மனைக்கொன்றாகவேசெல்ல
நாளு—முத்தமியே சித்தம்வைப்பா யெத்தினமும் நல்ல [158]

சீர்பெருஞ் சின்னமநகரிற் சிறந்து சென்னல் செழிக்க-கன்னல் ஜெயம்பெற
வே களிக்க--யென்றுஞ்—செல்வமது சிறக்கப் பத்திரகாளி வரமளிக்க

பார்முழுதும் நிறைந்தசிவ பரமபத்திரகாளி-பதி சின்னமநகர் நீடூழி—நின்று
பன்னாளும் வாழுஞ்சத்திரிய சான்றோரென்றும் வாழி [160]

மங்களம்

மங்களமா துமையரனருளைங்கரன் மங்களமே-மலர்வாணியு மங்களமே—திரு
மாலயன்மா முனிவர்களு மாமறை மங்களமே

செங்கைவடி வேலன் தெய்வயானையு மங்களமே—வள்ளிதேவியு மங்களமே
சென்னல்—சிறக்குஞ் சின்னமநகர் பத்திரகாளியு மங்களமே [126]

நாவாலே யித்தமிழை நவின்றவன்மங்களமே-யெந்நாளுமேமங்களமே-பரிசு
நற்கனகமீய்ந்த சத்திரிய சான்றோர்கள் மங்களமே

பாவாணர் பாரிலுள்ள பலர்களு மங்களமே—சான்றோர்பதி பிதிர்மங்களமே
தமிழைப்—படித்தவர்கள் கேட்பவர் பல்லூழியு மங்களமே. [164]

வாழி விருத்தம்.

அத்தனய பாகத்தமர்ந்த பத்திரகாளியம்மை யுமைமாது மீது
சுத்தனய சேதுநகர் கம்பளகுலத் துற்ற சுப்பயன் வரத்துதித்த
பத்தனய குமாரினிதுடன் பகர்முளைக் குமியைப் பாதசங்கீதமாக
நித்தனய சின்னமநன்னகர் சத்திரிய சான்றோர் நிகட்த்த நீடூழிவாழ்வே.

சந்த விருத்தம்.

சுருதி யந்தரி சுந்தரி மீதினி
லுறுதி யாகவே யாதுமுளைக் குமி
சரிதை தன்னைச் சகலரும் பாடிடில்
பரிதி திங்கள்வரைப் பாரில் வாழ்வரே.

பாதமுளைக் கும்மி முற்றிற்று.

148259
சென்னை-600 008.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பாட்டு நிர் | பிழை | பிழை திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 8 | | ரூற் | தார் |
| 2 | 2 | | மலற்கழல் | மலர்க்கழல் |
| ,, | 11 | | வரிதனில்சரு | வரிதனில்வரு |
| ,, | 14 | | ஒளிபருதியே | ஒளிபரிதியே |
| ,, | 38 | | வுசர்து | வுசங்கு |
| 3 | 3 | | றவள் | றவிழ் |
| ,, | 15 | | சூளு | சூழு |
| ,, | 16 | | சூள் | சூழ் |
| ,, | 17 | | சூளெழி | சூழெழி |
| ,, | 18 | | சூள் | சூழ் |
| ,, | 24 | 1 | திகள் | திகழ் |
| 7 | 1 | 61 | தேரங்க | தோங்க |
| ,, | 1 | ஷை | துடர்ந்துரண்டா | துடர்ந்திரண்டா |
| ,, | 2 | ஷை | அம்மன் ளுளில் | அம்மன் ருளில் |
| ,, | 24 | 72 | வளி | வழி |
| ,, | 33 | 77 | வத்து | வைத்து |
| 9 | 27 | 110 | பிரபவ | பிரபல |
| 10 | 3 | 117 | கடுத்தவரே காலி | கடுத்தால்யேகாலி |
| ,, | 18 | 121 | வீதனிலே | வீதிதனிலே |
| 12 | 1 | 152 | அருவை | அரிவை |
| ,, | 3 | 153 | புகல் | புகல |
| ,, | 5 | 154 | சாதாருக | சாதாரக |
| ,, | 22 | 161 | மாமரை | மாமறை |

Գա
2-34